C.C.No. 05/2023
நாள்: 04.11.2025
நேரம்: 11.50

P.W– 6 : காளியம்மாள், க/பெ. பாஸ்கரன்

2ம் எதிரி ஆஜர். 1ம் எதிரி ஆஜர் இல்லை. அவரது தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

சாட்சி மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு சத்திய பிரமாண வாக்குமூலம் செய்து எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :

சம்பவ நடந்ததாக கூறப்படும் நாள், நேரம் எனக்கு ஞாபகம் இருக்கிறதா என்றால் இருக்கிறது, அது நீதிமன்ற விசாரணையில் நான் கூறிய நாள், நேரம் என்றால் சரிதான். இந்த சம்பவம் குறித்து விசாரணை அதிகாரி என்னை விசாரிக்கும் போது சொன்னேனா என்றால் சொன்னேன். விசாரணை அதிகாரி எனது வீட்டிற்கு வந்து விசாரித்தாரா அல்லது நான் காவல் நிலையம் சென்றேனா என்றால் வீட்டிற்கு வந்து விசாரித்தார். சம்பவ நடந்ததாக சொல்லப்படும் காலை 7.00 மணியளவில் நான் எங்கு இருந்தேன் என்றால் வீட்டில் வேலை பார்த்து கொண்டிருந்தேன். எனக்கு முன்னதாகவே சம்பவம் குறித்து தெரியுமா என்றால் தெரியாது. சம்பவம் நடந்ததாக கூறப்படும் நேரத்தில் வீட்டில் எந்த இடத்தில் நான் வேலை பார்த்து கொண்டிருந்தேன் என்றால் வீட்டின் முன்வாசலில் மேற்குபுறத்தில் வேலை பார்த்து கொண்டிருந்தேன்.

வழக்கு கொடுத்தவரின் வீடு எனது வீட்டில் இருந்து எந்த திசையில் இருக்கிறது என்றால் எனது வீட்டிலிருந்து 3 வீடுகள் தள்ளி மேற்கு திசையில் உள்ள வீட்டில் இருக்கிறார். சம்பவம் குறித்து நான் எவ்வாறு தெரிந்து கொண்டேன் என்றால் எல்லோரும் கூட்டமாக ஓடினார்கள், நானும் சென்றேன். எனக்கு முன்னர் சிலர் ஓடினர் என்றால் சரிதான். மேற்கூறியவாறு நான் அனைவருக்கும் பின்னர் ஓடினேன் என்றால், எனக்கு குற்ற சம்பவம் குறித்து முழுமையாக தெரியாது என்றால் சரிதான். அ.சா.1 எனக்கு என்ன உறவுமுறை என்றால் தூரத்து சொந்தம். அ.சா.1ன் மகன், எனது சித்தி மகளை திருமணம் செய்துள்ளார் என்றால் சரிதான். ஆகவே அவர் தூரத்து சொந்தம் இல்லை என்றும், நெருங்கிய உறவுமுறை என்றால் சரிதான்.

நீதிமன்றத்தில் சம்பவம் நடந்தது 7.00 மணி என்றும், போலிசார் விசாரணையில் 8.00 என்றும் கூறியுள்ளேன், இதில் எது சரி என்றால் 7.00 மணி. மேற்படி சம்பவம் 7.00 மணிக்கு நடைபெறாமல், 8.00 மணிக்கு நடைபெற்று

இருந்தால் நான் கூறும் சாட்சியம் நீதிமன்றத்தில் தகுந்த சாட்சியமாகாது என்றால் சரியல்ல. குற்றம் சாட்டப்பட்டவர்கள் அ.சா.1 யை என்ன செய்தார்கள் என்றால், அடித்து கொண்டிருந்தார்கள், அது 5.00 நிமிடங்கள் இருக்கும். குற்றம் சாட்டப்பட்டவர்கள் எந்த வாகனத்தில் வந்தனர் என்றும், அதன் பதிவெண் தெரியுமா என்றால் தெரியாது. எதிரிகள், அ.சா.1 யை எங்கு அடித்தார்கள் என்றால் அவரது கன்னத்தில் அறைந்தார்கள். எந்த கன்னத்தில் அறைந்தார்கள் என்றால் தெரியாது. எதிரிகள், அ.சா.1 யை கன்னத்தில் அறைந்ததாக நான் போலிசார் விசாரணையின் போது சொன்னேனா என்றால் சொன்னேன், அதை பதிவு செய்தார்களா என்ற விவரம் எனக்கு தெரியாது.

நான் போலிஸ் விசாரணையில் சொன்ன விவரங்களை மறைத்து தற்போது பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல, அப்போது போலிசார் கன்னத்தில் அறைந்தது குறித்து என்னிடம் விசாரிக்கவில்லை. நான் சொல்வதுபோல் அல்லாமல் வேறு பாகத்தில் அடித்திருந்தால் நான் சொல்லும் சாட்சியம் பொய்யாகும் என்றால் சரியல்ல, கன்னத்தில் தான் அறைந்தார்கள். அ.சா.1 க்கு ஏதாவது காயம் ஏற்பட்டிருந்ததா என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. அ.சா.1 காயம் குறித்து என்னிடம் விளக்கம் கொடுத்தாரா என்றால் இல்லை. அ.சா.1 எங்கள் ஊரின் முன்னாள் தலைவர் என்றால் சரிதான். அ.சா.1 ன் சகோதரர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் என்றால் சரிதான்.

நான் எனது முதல் விசாரணையில் கூறியதுபோல், கடந்த 2 வருடங்களுக்கு முன்பு கோவிலில் ஒரு வண்ண பெயிண்ட் அடித்தது குறித்து எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அ.சா.1 தலைவராக இருக்கும் போது நிதி கையாடல் செய்துவிட்டார் என்று சொல்லி, அந்த ஊர் இளைஞர்கள் அ.சா.1 டம் கேட்பார்கள் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. எங்கள் ஊரில் உள்ள கோவிலில் சாதியை குறிக்கும் வகையில் பெயிண்ட் அடித்த விவரம் மற்றும் யார் அடித்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். சம்பவம் குறித்து என்னை கண்ணுற்ற சாட்சியாக என்னை விசாரணையின் போது சேர்த்தார்களா அல்லது உறவுக்காரர்களுக்காக சேர்த்தார்களா என்றால் சம்பவத்தை பார்த்ததனால் சேர்த்தார்கள். அ.சா.1 புகார் கொடுத்த விவரம் குறித்து எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

நான் சம்பவம் நடந்ததாக கூறப்படும் நேரத்தில் வீட்டில் வேலை செய்து கொண்டிருந்தபோது, 2ம் எதிரிக்கு காயம் ஏற்பட்டு மூக்கில் இரத்தம் வந்தை நான் பார்த்தேன் என்றால் சரிதான். இந்த சம்பவத்தில் காயம்பட்டவர் 2ம் எதிரி தான் என்றாலும், இந்த சம்பவம் குறித்து எதிரிகள் அ.சா.1 மற்றும் அவரது மனைவி மீது புகார் கொடுத்து வழக்கு நிலுவையில் உள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். நான் முதல் விசாரணையில் சொன்ன விவரமும், போலிசார் விசாரணையின் போது சொன்ன விவரமும் முரண்படுகிறது என்றும், அ.சா.1 எனது உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம்

அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் போலிசார் விசாரணையின் போது சொன்ன விவரங்கள், நான் நீதிமன்ற விசாரணையின் போது சொல்ல வேண்டிய விவரத்தை நான் ஏதாவது மறந்துவிட்டேனா என்றால் இல்லை.

நான் நீதிமன்ற விசாரணையில் சொன்ன விவரங்கள் தான் உண்மையானவை என்றால் சரிதான். நான் சம்பவத்தை முழுமையாக பார்க்கவில்லை என்றாலும், நான் சம்பவத்தை கேள்விபட்டு தான் சம்பவ இடத்துக்கு சென்றேன் என்றாலும், சம்பவம் முடிந்த பின்பு மற்றவர்கள் சொல்லி தான் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அ.சா.1 சொன்னதன் பேரில் தான் நான் இன்று சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை.**

CATHRENE JEBA SAKUNTHALA S

Digitally signed by CATHRENE JEBA SAKUNTHALA S
Date: 2025.11.04 16:46:57 +0530